பொருளை விளக்கும் பொருளாய் எதையும்

அருளாது விட்ட அமைப்பால் — மருள்தரும்
செல்வப் பொருளின் அதிகாரம் காப்பியச்
செல்வத்தில் இல்லாமற் செய்ததால் — செல்வப்
பொருளதி காரமும் இல்லையாம்' என்றே
பொருள்நயந் தோன்றப் புகன்றாள் — மருளாத
கண்ணப்பன் 'ஏதேது கண்ணம்மா, உன்போக்கில்
பண்ணற்கு விட்டிட்டால் காப்பியனார் — துன்னும்
இலக்கணச் சான்றோன் அலன்எனப் பாங்காய்க்
கலக்கமே இன்றிக் கழறிக் — கலக்குவையே'
என்றவன் சொற்போல் இளங்கொடி சொல்லுவாள்:
'ஒன்றிய தொல்காப் பியனைநான் — என்றும்
இலக்கணச் சான்றோன் எனவொன் றியம்பேன்.
முழக்கிய தொல்காப் பியத்தில் — விளக்கும்
இயல்லாம் கண்டிடின், நூன்மரபு தன்னால்
முயலும் நெடுங்கணக்கு முன்னோன்; — அயலாம்
பிறப்பியல் தன்னால் உடற்கூ றறிஞன்
சிறக்கும் புணரியல் தன்னால் — திறக்கும்
இசைப்பியற் சான்றோன்; கிளவியாக் கத்தால்

வசையில் **மொழிநூல் அறிஞன்**; — இசையும்
விளிமரபு தன்னால் விளித்தே உறவின்
**வழிமரபு கொள்ளும் வளத்தன்**; — விழியாம்
களவியல், கற்பியலால் **பாலியல் ஆய்ந்தோன்**;
அளவின் புறத்திணை யாற்**போர்த்--தலைவனாம்**;
மெய்ப்பாட் டியலால் **உளவியல் வல்லுநன்**;
செய்யு ளியலால் **ஒலியியல் — ஐயன்**;
மரபியல் தன்னால் **உலக வழக்கின்**
**உரம்அறி சான்றோன்**; எனவே — விரவிடும்
பல்கலைச் சான்றோனாய்ப் பார்த்தும் இலக்கணச்
செல்வன் எனமட்டும் செப்புவதோ? — சொல்'என,
புதிர்களை வைத்தே புகழ்க்காப் பியற்கே
**எதிர்மறை வாயிலாய் ஏற்றம்** — கதிர்போல்
உரைத்தாய் மகிழ்ந்தேன்; உணர்ச்சியால் உந்தும்
வரைத்தாழ் அருவிபோல் வாய்ந்தே — நிறைத்திடும்
ஒல்கா உணர்வோ டுலகெலாம் செய்குவம்
தொல்காப் பியத்திற்குத் தொண்டு.

368
[கலிவெண்பாட்டு]

# 48. நெடுநல்வாடை

*முத்துப்பல் வரிசையது முறுவலிக்குந் தமிழ்த்தாய்க்குப்*
*பத்துப்பாட் டதன்பாங்கில் பகர்ஏழாம் பாட்டதுவாய்த்*
*தலையாலங் கானத்துச் செருவென்றான் நெடுஞ்செழியன்*
*தலைவன்என நூற்றெண்பத் தெட்டடிகொள் அகவலதாய்க்*
*கொடுமைதவழ் வாடையதைக் குளிர்தென்றல் போற்காட்டி*
*'நெடுநல்வா டை'என்றே நிலைநாட்டும் நக்கீர!*

— *தரவு*

தென்றல்வளர் இளவேனில்
தொடுத்தெடுத்துப் பாடாமல்
குன்றதையுங் குளிரவைக்குங்
கொடுவாடை புனைந்தனைகாண்;
நன்றிருக்கும் பொருளிருக்க
நலிவுதரும் பொருள்பாடித்
தொன்றுதொட்டுப் புகழ்நட்ட
துணிதிறமை என்னென்பேன்;

புண்ணின்றி நடுங்கவைக்கும்
    பொல்லாத வாடையதைத்
தண்ணென்னும் நறுந்தமிழால்
    தகவாக்கி வனைந்தனைகாண்;
ஒண்ணாத ஒன்றெடுத்தே
    ஒள்ளியதாய் நலம்பாடி
மண்ணள்ளிப் பொன்னளிக்கும்
    மதர்ப்பதனை என்னென்பேன்!

மிகத்தளர்த்தும் பிரிவென்னும்
    அகப்பொருளும் வைத்துப்போர்
முகத்தமைக்கும் பாசறையாம்
    புறப்பொருளும் இணைத்தனைகாண்;
பகைத்துப்போம் பாசறையில்
    பாண்டியன்றன் திறம்பாடி
அகத்துக்கே புறங்காட்டி
    அடைந்தவெற்றி என்னென்பேன்!

— இவை மூன்றும் தாழிசைகள்

வையகமென் றெடுத்துப்பா
சறைந்தொழிலென் றேமுடித்தாய்?
வையகத்துள் எந்நாளும்
வளரும்போர் எனுங்குறிப்போ?
இடையிலெலாம் வாடையதன்
இன்னலதை விரித்துரைத்தாய்;
அடைவதெலாம் உலகத்தார்
அரும்நடுக்கம் எனுங்குறிப்போ?
— பேரெண்

[32]"புதுப்பெயல் பொழிந்தென" மழைசொலித் தொடங்கினை
உலகினர் கூதிரில் உறுநிலை தொடர்ந்தனை;
அருங்கலை மனையதன் அழகெலாந் தொடுத்தனை;
அரசனின் பாசறை அருஞ்செயல் முடித்தனை.
— அளவெண்

கன்னங்கள் நடுக்கும் வாடை;
கறவைகன் றுதைக்கும் வாடை;
குதிரைபுல் எடுக்கா வாடை;
மகளிர்பூ முடிக்கா வாடை;
மைந்தர்நீர் குடிக்கா வாடை;
அரசன்கை முடக்கும் வாடை;

'வடந்தைத்தண் வளி'யாம் வாடை;
இவையன்றோ நெடுநல் வாடை!

இடைவெண்

அரும்பவிழ் பொழுதறிவார்,
இரும்புவிளக் கேற்றுவார்;
நெல்மலரைத் தூவுவார்;
அகிற்புகையைப் பாவுவார்;
கதவந்தாழ் பூட்டுவார்;
கனிவிசையைக் கூட்டுவார்;
பிரிவதனால் ஏங்குவார்;
பின்அவரோ தூங்குவார்
அரண்மனையில் அரசியாள்;
அரசன்வரப் பரசுவாள்;
வேம்புதலைப் பாண்டியன்;
கூம்பிரவில் ஈண்டியே
விழுப்புண்கொள் வீரரைக்
களிப்பாக்கச் சாருவான்.
இவையாவும் படைத்தனை;
சுவையாவும் நடத்தினை.

- சிற்றெண்

[இவை ஈரடி இரண்டு, அளவடி நான்கு, சிந்தடி எட்டு, குறளடி பதினாறு கொண்ட நீர்த்திரை.]

என்றெலாம், — தனிச்சொல்

நற்பெரும் புலவ,நின் நயமார் பாடலின்
சொற்பயன் சுவைத்தனன்; சொல்லிப் பரவுவன்:
பருவப் பாங்கும், பாடமை மூதூர்
தெருவும், அரணும், தேர்ந்தநல் லில்லும்,
கட்டடக் கலையும், கதவின் நிலையும்,
கட்டிலிற் 'கச்சுக் கட்டில்'என் றொன்றும்,
அன்னத் தூவியில் அணையும், அந்நாள்
வண்ணத் தமிழர் வளத்தின் ஈட்டமாய்
வனைந்த பாங்கை நினைந்தின் புறுவன்.
இவையெலாம் தொகுத்துச் சுவையெலாம் வகுத்துக்
கடிதாம் பிரிவிற் கலங்குவார்க் குக்கூதிர்
நெடிதாய் நீடலின் 'நெடு'என் சொல்லும்,
காதல் மறந்து கடும்பா சறையில்
மோதலுக் குதவலின் 'நல்'லெனுஞ் சொல்லும்
வடக்குக் காற்றதால் 'வாடை' என்றும்
அடுக்கினை "நெடுநல் வாடை" எனும்பெயர்.
நின்றன் புலமைக் கென்றன் தமிழ்க்குலம்
என்றும் நன்றிபா ராட்டி
ஒன்றி வணங்குதும் நின்று தழைக்கவே.

— சுரிதகம்

369

[நீர்த்திரை ஒத்தாழிசைக் கலிப்பா]

## 49. ஏட்டுச் சுரங்கங்காள்!

நூல்களை இயற்றிட அறிவுளீர்,
நூல்களில் புதியன இயற்றுவீர்!
நூல்களாய்ச் சிறுகதை, பெருங்கதை
நூற்பதை அளவொடு நிறுத்துவீர்!
நூல்களாய் அகநூல், அறிவுநூல்,
நுண்கலை வானநூல், வாழ்வுநூல்,
நூல்வர லாற்றுநூல், உழவுநூல்,
நுவலுவீர், தமிழ்மொழி ஒன்றினால்! 370

தொழிலுக் குயர்வுநூல், பாடநூல்,
தொன்மைப் பொருளுறு நூல்களும்,
எழிலுக் குரியபல் நூல்களும்,
எளியோர் வாழ்வகை நூல்களும்,
இழிவினை எரித்திடும் நூல்களும்,
இனநலம் உயர்த்திடும் நூல்களும்,
ஒழிவிலா தியற்றுவீர்; அறிஞரீர்!
ஒழுக்கமே நூல்களால் பரப்புவீர்! 371

இல்லாத நற்பொருள் பிறமொழி
    இயம்பிடில் தமிழினில் ஆக்குவீர்!
நல்லதோர் சொல்லினை உணர்த்திடும்
    நலமெனில் மொழிபெயர்த் திடுக,நீர்
செல்லாத நூல்கள் எவற்றையும்
    செல்லாத காசென ஒதுக்குவீர்!
இல்லாத தமிழரிங் கில்லென
    இயற்றுவீர் தமிழக நிலத்திலே!

372

தொல்லறிவாளர்கள் ஆக்கிட்ட
    தொன்னூல் நற்பொருள் வாய்ந்ததை
நல்லுரை எளிதென ஆக்குவீர்!
    நலிவைப் பெருக்கிடும் பொருளெனில்
கல்லறை கட்டுவீர்! ஒலியிடுங்
    கடலுடை உலகினில் தமிழகம்
வல்லர சாக்கிடும் வலியினை
    வாய்த்துளீர், செயலினால் ஆற்றுவீர்!

373

மதர்த்துள தமிழறி புலவரீர்!
    மடைதிறந் தனையநும் அறிவினைப்
புதர்க்குளே பொதிந்தநன் மணியெனப்
    புதைத்துமே வாழ்வதும் நாணமே!
இதற்கிது பொருளென, அன்றென
    இடைமறுப் பெழுதியே நாளெலாம்
பதர்க்கென உழுவதை விட்டுநீர்
    பயனுடைச் செயல்களே ஆற்றுவீர்! 374

ஒருமுறை பயின்றபின் மூலையில்
    ஒதுக்குதல் நூலெனத் தகுவதோ?
தருசுவை தேன்எனச் சுனையதன்
    தெளிவெனத் தென்றலின் போக்கெனப்
பொருளுடை நூல்களே புதுக்குவீர்!
    பொன்னெழுத் தெனுஞ்சொலை ஆக்குவீர்!
மருவிய எழுத்துளீர், மனங்கொளின்
    மண்ணிடைத் தமிழகந் தாழ்க்குமோ? 375

[அறுசீர்
ஆசிரிய விருத்தங்கள்]

# 50. களஞ்சியத்தில் கறையான்கள்.

உறைந்திட்ட தமிழகத்தின்
உயர்வறிஞர் தமிழர்க்கே
உரைத்திட்டார் உரைகல்லில்
உரைத்தெடுத்த நற்பொருளை;
'உரைவகுப்பேன்' என்றுசில
உரையாளர் உரையெழுதி
உறையினின்று வாளுருவி
உடல்குறைத்தார் தமிழினுக்கே. 376

தொல்காப் பியம்என்னுந்
தமிழ்வரம்புத் தொன்னூற்கு
நல்லுரைகள் முன்னிருக்க
நச்சினார்க் கினியனெனும்
பொல்லாத ஒருபுலவன்
புகுந்திட்டே உரையெழுதி,
இல்லாத புகுத்தமைத்தே
இழிவளித்தான் தமிழர்க்கே. 377

நல்லொழுக்கம், நற்பண்பு,
நாகரிகம், வாழ்வகையைச்
சொல்வித்த பொய்யாத
சொல்லென்னும் குறள்தனக்கே
வல்விலங்காம் வடமொழியின்
வழிகொண்டே உரையெழுதிக்
கொல்வித்தான் தமிழ்ப்பண்பைக்
கொடும்பரிமே லழகன்என்பான். 378

கிள்ளைமொழி ஆழ்வார்கள்
கிளந்திட்ட பெருநூற்கு
வெள்ளையிப் பெருவிளக்கம்
வரைவதாய், வடமொழியைத்
தள்ளாமல் தமிழ்தள்ளித்
தகர்த்திட்டான் தமிழ்நடையைப்
பிள்ளைஎனும் போர்வையிலே
பெரியவாச்சான் எனும்பெயரோன். 379

நையாத தமிழினுக்கு
நலிவைமுன் அவர்செய்ய,
ஐயா,பல் கலைக்கழக
ஆராய்ச்சி செய்திட்டோர்
'மெய்யாக வடமொழியே
முதலாகும்' எனக்கூறி
வையாமல் புரிந்திட்டார்
வாள்வீச்சு தமிழினுக்கே. 380

களஞ்சியத்தில் அந்துமுதல்
கறையானும், வண்டுகளும்
வளம்பெற்று நெல்லழிக்கும்
வகையேயாய்த் தமிழமுதைக்
குழம்பாக்கி வாழ்வதொடு
குலைக்கின்றார் தமிழகத்தை;
உளம்பதைக்கும் இச்செயலை
உடைத்தெறிந்து தமிழ்காப்பீர்! 381

[தரவு கொச்சகக்
கலிப்பாக்கள்]

# 7. சொல்லின் நடை



சொல்லுக்கொரு நடையுண்டு:
சொல்லின்வேர் அதன்காலாம்;
சொல்வரலா றதன்இயக்கும்;
நெல்மணிபோல் பொருட்செறிவு

நடைப்பெருமை. இவையுணர்ந்தே
இடம்காலம் அறிந்துசொ லும்
நடையஃதே நற்பயன்சேர்
கொடையாகும்; குறள்சொல்லும்:

''இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக, சொல்லின்
நடைதெரிந்த நன்மை யவர்''

(குறள்: 712)

## நடையின் சுவடுகள்:

பொருள்
எண்

முதன் மொழி - 51.

மக்கட் பூண்டு - 52.

ஐயா... பையா...! - 53.

உண்பதற்குச் சோறு, தின்பதற்குத் தம்பலம் - 54.

சொல்லாட்டமும் பொருளூட்டமும் - 55.

கவிதைக்குமரி - 56.

சாவில் உயிர் - 57.

## 51. முதன் மொழி

மாந்தனின் முதன்மொழி தேன்தமிழ் மொழியே;
ஏந்துவம் இதற்கோர் ஏற்புடைச் சான்றே.

தொன்மை மொழியின் தோற்றுவாய் காணத்
தென்றிசை உலகைத் தேர்ந்தனர் அறிஞர்.

தென்றிசை அதனிலும் தென்றமிழ் நாட்டுத்
தொன்மலை முகட்டில் தோன்றினர் மாந்தர்;
அன்னவர் வளர்ந்தே அக்கால இலெமூரிய
முன்னவர் ஆயினர்; 'முதன்மை மாந்தர்
அவரே' என்றனர், அறிஞர் உறுதியாய்.
எனவே,
மலையில் முளைத்ததே மக்கட் பூண்டு.

முளைத்த பூண்டின் முளையதோ குழந்தை.
பிறந்த குழந்தை பிளந்த வாயது
திறந்த ஒலியே திகழும் 'அகர'மாம்.
திறந்த இதழ்களைத் திரும்ப இணைக்கப்
பிறந்த ஒலியே 'மகரம்' ஆயிற்றே.

ஒலியொடு திறந்த உதட்டை மூடி
ஒலித்துத் திறக்கின் 'அம்ம' எனும்உரை
நீட்டித் 'தம்மா' வாகி, அஃதே
காட்டிய துள்ளக் குழந்தைதன் உணர்வை.
வழியும் உணர்வின் ஒலியே மொழியாம்;
மொழியே மாந்தனின் முதல்அடை யாளம்.

அவ்வடை யாள முதற்சொல் 'அம்ம'வாம்.
செவ்விய 'அம்ம' செந்தமிழ்ச் சொல்லே.
மாந்தனின் முதற்சொல் செந்தமிழ் என்னில்
போந்தது தொன்மைக் கொருவரை யறையே.
மாந்தனின் முதன்மொழி தேன்றமிழ் மொழியே.

382

[நிலைமண்டில
ஆசிரியப்பா]

# 52. மக்கட் பூண்டு.

மலையில் முளைத்தது மக்கட் பூண்டு;
தொலைகடற் பரப்பெலாம் தொடர்ந்ததப் பூண்டே.
அப்பெரும் பூண்டோ அருந்தமிழ்ப் பூண்டெனச்
செப்பினர் உயிரியல் செம்மைகொள் அறிஞர்.
முளைவெடித் தெழுந்து முளைத்தவப் பூண்டு

தளிர்த்தும், கிளைத்தும், தழைத்தும், முகைத்தும்,
மலர்ந்தும், சுரந்தும், மணந்தும், மறிந்தும்,
கிளர்ந்தும், காய்த்தும், கனிந்தும், விதைத்தும்
பரவிய கதையோ விரவியே பெருகும்.

அவ்வழி,

முதற்பெரும் மக்களின் முதல்வர் தோன்றி
முற்கியும், கனைத்தும், முணகியும், கூவியும்,
சொற்குறிக் கொலித்தும், சொல்லுரு வாக்கியும்,
ஒருசொற் கொண்டே ஒண்பொருள் பெருக்கியும்
திருமொழி எனுந்தமிழ்ப் பெருமொழி படைத்த
திறம்எனும் முதல்அதி காரம் தெரிப்பன்:

பசியும், பரிவும், பற்றிப் பணைக்கப்
புசித்திடத் துடித்தனர்; புன்பயிர் உகந்ததை
'ஆ'என அருந்தினர்; 'ஈ'எனச் சுவைத்தனர்;
*'ஊ'என உண்ண °'ஏ'என எய்தனர்;
'ஓ'எனும் ஒலியாம் ஓடுநீர் பருகினர்;
†'ஐ'என வியந்தனர்; ‡ஔவியம் அறியார்.
பாறைக் கிடுக்கில் பாய்ந்த கிழங்கைத்
தூறொடு பறிக்கத் துதைந்த பாறையின்
சில்லுடைப் பக்கம் கல்லிப் பெயர்த்தனர்;
உணர்வைக் கல்லி நினைவை இயக்கிய
அந்தக் கல்லலால் அறிவியல் புகுதலால்
'கல்வி'என் றொருசொற் கண்டனர்;
சின்னீர்
ஒழுகி ஓடல் ஓர்ந்தவர் தொடர்ந்தனர்;
தொடர்ந்த அந்நீர் 'தொப்'பெனப் பள்ளத்
தடர்ந்தே வீழ்ந்த ஆர்ப்பொலி கேட்டனர்;
அருமையாய் வீழ்ந்த அதனைக் கண்டவர்
அரும்வீழ் - அருவீழ் - 'அருவி' என்றனர்.

---

* ஊ - ஊண் - உணவு. ° ஏ — அம்பு.
† - வியப்பு. ‡ ஔவியம் - பொறாமை.

நலமும், எழிலும், வளமும் மல்கிய
வளமை - மல்லல் வழங்கலின், மல்லே
உளதை 'மலை'யென உரைத்தனர்; கண்டு
வியந்த அருவிநீர் விழுந்தடித் தோட
நயந்து, தொடர்ந்து நண்ணினர் தரையே;
சரிந்துதாழ்ந் திறங்கிச் சரிவது நிற்கத்
தரிப்பது 'தரை'என, நில்-அம் 'நிலம்'எனப்
பார மலைக்குப் *பாராய்த் தாங்கலின்
*பார்'என, உயிர்கள் படிதலின் 'படி'எனச்
சாற்றினர்;
மலைகால் ஊன்றப் பெற்ற
மண்டிலம் கால்-கான் கால்+து 'கா'டென
விளம்பிச் செறிவுக் குளம்பதைப் புற்றனர்.
நீரின் ஓட்டமே நீள்நெறி யாக்கிப்
பாரில் அதனைப் பார்த்து நடந்தனர்;
ஆறாய் - வழியாய் அந்நீர் நடத்தலின்
யாறென அழைத்தனர்;

* பார்-அச்சு

ஆறெனும் அஃதே
பிளந்திரு பாங்காய்க் கிளர்ந்தோ டுவதுகண்
டிடுப்பிடைக் காலின் இருபிரி வென்னத்
தொடுத்து, வாய்போல் *புழைவழி வழிதலின்
'வாய்க்கால்' என்றனர்; வார்ந்தோ டுவதை
மடுத்தலின் 'மடை'என,
மடைவழிப் பாயுநீர்
வரம்பாய்க் கிடந்த 'வரப்'பிடைச் சிறைப்படல்
'செறு'என, செய்தொழிற் குற்றதைச் 'செய்'என
வறுநிலம் நீரால் கழல்தலின் கழல்நீர் -
கழனீர் - 'கழனி'; வையம் தொழிற்படும்
கிழமையின் வையல் - 'வயல்'என வளத்தொடு
வளர்ந்தவர், ஓடுநீர் வழிக்கொண் டேகினர்;
ஓடுநீர்க் கெதிரே நீடுநீர்ப் பரப்பது
பேரொலி தந்ததால் 'ஆர்கலி' என்றனர்;
நீரது புணர நேர்ந்ததால் 'புணரி';
பரந்து கிடத்தலின் 'பரவை'; நீரால்
வருவாய் தருவதால் 'வாரி'; உலகின்
வேலியாய்ச் சுற்றலின் 'வேலை'; எளிதில்

* புழை-குழாய் போன்ற துளை

கடத்தற் கல்லதால் 'கடலே'; ஆழ்ந்த
ஆழம் உடைமையால் 'ஆழி'; மூன்று
மழை,ஆற் றூற்றுநீர் மருவலின் 'முந்நீர்';
நலிப்பொலி தருங்கடல் 'நரலை'; வாய்பெறும்
உவர்ப்புச் சுவையதால் 'உவரி'என் றுலகில்
அழைத்தனர்;
இவ்வா றருஞ்சொல் லமைத்த
அழகை, அறிவை அளக்க ஒண்ணுமோ?
மலையும், காடும், மண்வள வயலும்,
நிலைத்த உலகதாம் 'நானிலம்' தன்னில்
பல்கிப் பெருகிய ஒல்காத் தமிழ்க்கடற்
சொற்களில் ஒருதுளி சொற்றனன்; முற்றக்
கற்றல் நமக்குக் கடனாம்;
கற்க, கசடறக் கற்பவை; நிற்கவே!

383

[நேரிசை
ஆசிரியப்பா]

# 53. ஐயா———! பையா———!

‘சொல்’என்னும் சொல்லிருக்க
‘மொழிஎன்றும்’ ‘கிளவி’என்றும்
சொல்மூன்றாய்ச் சொல்லிவைத்த
கரணியம்என் ஐயா;
சொல்லவேண்டும் யானறிய மெய்யா?

வெல்லத்தமி ழில்‘ல’கரம்
‘ழ’கரமொடு ‘ள’கரம்என
விளங்கும்மூன் றெழுத்துளதை
நீயறிவாய் பையா;
வேண்டிவைத்தார் மூன்றுசொல்லில் மெய்யா.
384

மூன்றெழுத்து மாற்றமன்றி
மூண்டுவரும் பொருள்மாற்றம்
முகிழ்ப்பதுண்டோ நான்மொழிந்த
மூன்றுசொல்லில் ஐயா;
மொழியவேண்டும் யானறிய மெய்யா?

தோன்றெழுத்துத் தொடர்பு'சொல்'லாம்;
தொடர்சொல்லின் தொகை'மொழி'யாம்;
தொடுத்துக்கிளத் தல்'கிளவி'
தெரிந்துகொள்நீ பையா;
தேர்ந்திதனை அறியவேண்டும் மெய்யா.
385

'உண்மை'என்றும், 'வாய்மை'என்றும்,
'மெய்மை'என்றும் மூன்றுசொல்லை
உரைத்துவைத்த கரணியத்தை
உரைக்கவேண்டும் ஐயா;
உண்மையதை யானறிய மெய்யா?

உண்மையதோ எண்ணம், சொல்,
செயல்மூன்றாய் வளருமென்றே
'உள், வாய், மெய்' சொற்கள்வைத்தார்,
உணர்ந்துகொள்வாய் பையா;
உண்மையிதில் ஏதுகுறை; பொய்யா?
386

'இயல்'என்றும் 'இசை'என்றும்
'கூத்'தென்றும் முத்தமிழாய்
இயற்றிவைத்த கரணியத்தை
இயம்பவேண்டும் ஐயா;
இயல்பதனை யானறிய மெய்யா?

'இய்ல்'எண்ணம் இலக்கியமாய்,
இனியபேச் 'சிசை'யதுவாய்,
இயக்கம்அது 'கூத்'ததுவாய்
இயற்றிவைத்தார் பையா;
இவைமூன்றும் வளர்க்கவேண்டும் மெய்யா.

387

'இல்'என்றும் 'மனை'என்றும்
'வீ'டென்றும் தனித்தனியாய்
இருப்பிடத்தைக் குறித்துவைத்த
எண்ணம்என்ன ஐயா?
இதில்மாற்றம் இல்லைஎன்றால் பொய்யா?

'இல்'என்றல் இருப்பிடமாம்;
நிலைத்தஇல் லம்'மனை'யாம்;
விடக்கட்டும் 'பாடி',வீடாம்
இவைஉணர்வாய் பையா;
இதில்வாழ்வு வளர்ச்சியுண்டு மெய்யா. 388

செந்தமிழில் இவ்வாறாய்ச்
செறிந்தபொருட் செஞ்சொல்லின்
செழிப்பதனைக் காணும்வழி
செப்பவேண்டும் ஐயா;
சேரும்நல்ல அறிவெனக்கு மெய்யா?
நந்தமிழின் இலக்கணநூல்
நலமிக்க இலக்கியநூல்
நயந்துகற்று ஊக்கமதை
நாட்டவேண்டும் பையா;
யான்உனக்கு நெறிசொன்னேன் மெய்யா! 389

[சந்தத்தில் அமைந்த
ஈரடித் தாழிசைகள்]

# [33] உண்பதற்குச் சோறு; தின்பதற்குத் தம்பலம்

— கவிதைப் பாதை
[பல்லாயிரம் ஆண்டு]-
காதல் பாதையில்
[அறுபது ஆண்டு]—

இசை நங்கை:

குயிலாய்க் கூவினேன் குமரா! எனைநீ
மயிலாய் அகவி மறித்தாய்; காதல்
மனத்தால் கொள்ளா மங்கையைத் தமிழ
இனத்தான் மறித்தல் இழுக்காம்; 'உன்னரும்
இசையால் மயங்கினேன்' என்பாய்: நீயொரு
இசைபெற் றவனெனில் இசைவேன்; வாழ்வில்
இசையிலா வசையோர் இழிவாம்; ஆசாம்;
ஆசினை *இரிக்கும் அரும்புகழ் உண்டெனில்
பேசிடு; காதல் பேசிடும் என்னுளம்.
மாசினை இரிக்கும் '**ஆசிரி யப்பா
அகவலில்**'[34] பாடினேன் அன்பா!
முகவரி சொல்லி முழக்குன் புகழே!

[நேரிசை
ஆசிரியப்பா]

---

* இரிக்கும் -. விலகி ஓடச்செய்யும்

எழுத்து நம்பி:

அகவற் குமரீ! அறிவிய லைநான்
தகவாய் எழுதும் தமிழன் — புகழ்இது
பண்பார்ந்த காதலுக்குப் பாவாய்நீ ஒப்பஇது
**வெண்பாவிற் செப்பல்**[35] விரும்பு.

391

[நேரிசை வெண்பா]

நங்கை:

தாய்த்தமிழில் அறிவியலைத் தருகின்ற தமிழன்எனில்
வாய்த்ததென்றன் வாழ்வென்பேன்; வளர்அகவல் வெண்பாவைப்
போய்த்தழுவி இணைந்திட்டால் பொலிகின்ற **கலிப்பா**போல்
தூய்த்தழுவல் தழுவிடுவோம்; **துள்ள**[36]லிலே கலித்திடுவோம்;
மாய்த்திடுவோம் தனித்தனிமை; மதர்க்கின்ற எனதுடலில்
தோய்த்திடுவாய் உன்னிருதோள்; துளிநேரம் பெருநெருப்பாம்.

392

[ஆறடித் தரவுக்
கொச்சகக் கலிப்பா]

நம்பி:

குலவிஎன்னுடன் கலவிகண்டஉன் இனியமெல்லுடல்
பொலிவுகொண்டிட வயிறுவாய்த்தனை;
பொங்குநின்னடை
இசையுவஞ்சியின் கொடிஅசைவென
அசைந்தசைந்ததே;
'அசைதல்'என்பதற் கரியசொல்லது 'தூங்கல்'என்ப
தாம்;
தூங்கலோசையில் துளங்குவஞ்சி[37] யாம்
பாவையாயினை;
எனவே,
வஞ்சிப் பாவைநீ வாழ்க!
**வஞ்சிப் பா**விது, வஞ்சிக் காதே.

393
[சிந்தடி வஞ்சிப்பா]

நங்கை:

இன்ப மருட்கை உனக்களித்தேன் என்றோநீ
அன்பு 'மசக்கை' எனக்களித்தே இன்பளித்தாய்?
ஒன்று கிடைத்திட்டால் ஒன்றுதவும் சீர்பெற்றாய்;
வென்று வளத்தில் விளங்குக — பண்பாளா!
என்றே,
மருட்கை கொண்ட மங்கை
**மருட்பா**[38] சொன்னேன், மகிழ்ந்தேற் பாயே!

394
[வியனிலை மருட்பா]

நம்பி:

செல்வி ஈன்று செல்வம் ஈந்தாய்;
மெல்லத் தாழ்ந்த செல்வி குரலோ,
நல்ல தாழிசை[39] தான்.

395

[வெண்டாழிசை]

நங்கை:

'அத்தான்' எனுந்திரு அன்பொலி,
செல்வி இவள்பிறந்தே
*'அத்தன்' எனஆக் கினளே;
இவள்தனை 'அக்கை'என்றே
முத்தெனுஞ் செல்வன் மொழியப்
பிறந்தனன்; நங்குடிக்கோ
முத்திரை வைக்கும் துறைகள்
முகிழ்க்கும்; துறை[40]ப் பிறப்பே.

396

[கட்டளைக் கலித்துறை]

நம்பி:

பெண்ணொன்றும் ஆணொன்றும் பெற்றுக் கொண்டோம்
பின்னொன்று வேண்டாம்நாம் பேணிக் கொள்வோம்;
கண்ணொன்றும் இவ்விருவர் தன்ற னக்காய்க்
கணக்காகத் துணைதேடிக் களித்து, மேலும்

---

* அத்தன் - தந்தை

விண்ணொன்றும் புகழெல்லாம் விரித்து வாழ்வை
விரித்தம்எனப் பெருக்கிடுவார்; **'விரித்தம்'** இஃதை
பண்ணொன்றும் **'விருத்தம்'**[41]எனப் பகர்ந்தார்
அன்றோ!
பழந்தமிழை விரித்தவரும் விருத்தம் சேர்ந்தார்.
397
[எண்சீர் ஆசிரிய விருத்தம்]

நம்பி:

**'சிந்து'** பிறத்து தவழ்ந்திட, — **'கும்மி'**
சேர்ந்து குலுங்கி அவிழ்ந்திட,
**'சந்தம்'** இசைந்து கிளர்ந்திட, — இருவர்
வந்து பிறந்தனர் வளர்ந்திட.
398
[ஈரடிச் சிந்து]

நங்கை:

நந்தமிழ்த் தொன்மர பாகிடுஞ் செய்யுளை
நல்லுண வாகிடும் ஊட்டம் என்போம்;
செந்தமி ழிற்புது மைக்கவி தை'களைச்
செய்திடின் சேர்த்துச்சு வைத்திடுவோம்.
399
[கும்மித் தாழிசை]

நங்கை:

ஊட்ட உணவைச் சொன்னாய்;
உண்டநான் ஊட்டங் கண்டேன்;
நீட்டுவேன் ஒன்றைநானே, - கிளியே!
நீதின்று நோட்டஞ் சொல்வாய்!

400

[கிளிக்கண்ணி]

பச்சைச் சுவரிலே
வெள்ளை அடித்தாள்;
சுவரைச் சுருட்டினாள், பிளவை வைத்தாள்;
முத்துத் திரிகையில் அறைத்தாள்;
குருதி கொப்பளித்தது; ஆம்,
மூன்றும் கலந்த *தம்பலம்
குமரி இதழிலே குங்குமப் பூச்சாய்க்
குமரன் நெஞ்சைக் குத்திக் குடைந்தது.

401

[புதுக்கவிதை]

நங்கை:

அந்நாள் இளங்கோவடிகளார் தந்த சிலப்பதிகாரக் குன்றக் குரவையில், உரைநடை பாட்டில் மடுத்து

* தம்பலம் – தாம்பூலம் எனப்படும் வெற்றிலை, பாக்கு. சுண்ணம்.

'உரைப்பாட்டு மடை'எனத் தந்தார்; அதன் மறு
பதிப்பாய்நின் புதுக்கவிதையைக் காண்கின்றேன்.
402

[உரைப்பாட்டுமடை]

நோட்டங் கேட்டாய்; நீட்டுவன் கேட்பாய்,
நின்புதுக் கவிதை:
கருத்துத் துணுக்கு, கரும்புத் துண்டு;
கன்னியின் கடைக்கண் வீச்சு;
நொறுக்கிய தேங்குழல் முறுக்கு;
நொறுவல் தீனி;
உண்டபின் தின்னும் தம்பலம்;
கண்டஉன் கவிதை கணக்காய் வளர்கவே!
403

[இணைக்குறள் ஆசிரியப்பா]

நம்பி:

மோனையிலும் எதுகையிலும்,
ஆனதளைக் கட்டினிலும்,
அலைபாவும் ஓசையிலும்,
விளையாடும் அகம்புறத்தும்
வலைபோடும் நயத்தினிலும்.

கலையாமல் மனத்தினிலே
மரபுவழிக் கவிதையதோ
உரமாகி நிலைத்துவிடும்;
நாட்டமுள்ள அறிவிற்கும்
ஊட்டஉண வாகிவிடும்.

உண்டஉணா செரிப்பதற்கும்,
தொண்டைக்கனிச் செவ்வாய்க்கும்
வெற்றிலை பாக்கு சுண்ணமாம் தம்பலம்
உற்றதோர் இனிப்பு மருந்தாம்; அதனால்,
தம்பலம் எனப்புதுக் கவிதையைச் சொன்னால்
அம்பலம் ஏற்குமே, அருந்தமிழ்ப் பெண்ணே!
நம்புதுக் கவிஞரும் நலமெலாம் சூழப்
தென்புலம் வளர்க்கும் தெளிவொடு
பம்புசீர்ப் புகழில் பரப்புக தமிழே!

404

[வஞ்சிக் குறும்பாட்டு]

நங்கை:

நன்னனனே நானனனே நன்னானே நன்னனனே
நன்னனனே நானனனே நன்ன நன்ன நன்னானே

வெத்திலையாம் வாய்ச்செலவாம்
மச்சான்வாய் செவக்கையிலே
சுத்துதையா சொக்குதையா;
சொத்தப் பல்லும் மயக்குதையா! 405

போயிலையப் போட்டாத்தான்
புத்துநோயி வந்திடுமாம்
வாயிலே நானிருப்பேன்,
வைக்க லாமோ புத்துநோயே? 406

நம்பி:
வேத்துமொழி போயிலையாம்;
வேண்டாண்டி போடுவனோ?
காத்திடுவேன் தாய்மொழியே,
கண்ணுக் குட்டி கலங்காதே! 407

எச்சலுக்கு நஞ்சான
ஏதையுநான் கலக்கேண்டி;
கொச்சையாப் பாடேண்டி,
கோலப் பெண்ணே, கசங்காதே! 408

[பண்ணத்தி என்னும் நாட்டுப்பாடல்]

நங்கை:

குறையறு முறையது வரையறை உறைவது;
கறைபெறும் முறையது சிறுசெயலே;
துறைதொறும் தமிழது புரையறு மொழியென
வரைதுறை தருநிறை தமிழரதே.
409

[முடுகு வண்ண ஈரடித் தாழிசை]

நம்பி:

சோறு சமைப்பதற்கும்,
சுவைக்குழம்பு கொதிப்பதற்கும்,
சாறு இறக்குதற்கும்,
சார்கறிகள் கூட்டுதற்கும்
வேறுவே றளவுண்டு;
வேவதற்கும் வரம்புண்டாம்;
ஏறுமாறு சமையலெனில்,
தாறுமாறு சாப்பாடாம். 401

தாளிப்புக் கெண்ணெய்எனில்
மண்ணெண்ணெய் தாளித்மா?
தாளிப்புக் கெண்ணெய்எனில்
தாழிஎண்ணெ யோவேண்டும்?

தாளிப்புக் குரியவைதாம்
 தகுமளவாய் இடவேண்டும்;
தாளிப்பு மணங்கொடுக்கும்;
 தக்கசுவை யுங்கொடுக்கும்.
411

[தரவிணைக் கொச்சகக் கலிப்பாக்கள்]

நங்கை:

தம்பலத்தைத் தரிப்பதற்கும் தக்கதோர் அளவுண்டு
தெம்புதரும் வெற்றிலைக்குத் தேர்ந்தசுண்
ணாம்பளவும்
பம்புகின்ற பாக்களவும் பக்குவமாய் இல்லெயெனில்
வம்புதும்பே ஆகிவிடும்; வாய்வெந்து போகுமன்றோ?
412

நம்பி:

வாழ்க்கை வரையறை வாய்க்கக் களித்தனம்;
*பூட்கை இருவராய்ப் பொன்மகப் பெற்றனம்;
வேட்கைப் புதுக்கவி தைப்பெய ஞ்ந்தனைப்
பாட்டராய்ப் பெற்றனம்; பல்குக உலகே!
413

[கலி விருத்தங்கள்]

இருவரும்:

'உண்பதற்குச் சோறுடன் தின்பதற்குத் தம்பலம்,
என்பதற்குக் கொள்ளேம் எதிர்ப்பு
414

[குறள் வெண்பா]

* பூட்கை — கொள்கை

# 55. சொல்லாட்டமும் பொருளூட்டமும்.

களங்கமின்றிப் பேசுவது கலகலப்பு;
கடுஞ்சொல்லை வீசுவது கடுகடுப்பு;
—விளையும் கைகலப்பு.
வளங்குவிக்கும் இன்சொல்நல் விதைவிதைப்பு;
வதங்கவைக்கும் சினச்சொல்லோ சிடுசிடுப்பு;
—விளைக்கும் சீர்குலைப்பு. 415

சிறுபூசல் காட்டினால் சலசலப்பு;
சிறிதளவு மீறினால் சிலுசிலுப்பு;
—சீறினால் சீரழிப்பு.
உறுசெயலில் விரைவுதான் சுறுசுறுப்பு;
விரைவுமுறுக் கேறினால் விறுவிறுப்பு;
—வினைக்கது வரவேற்பு. 416

அமைதியின்றிச் செய்வதுதான் பறபறப்பு;
அஃதுணர்ச்சி மீறினால் படபடப்பு;
—அதுதரும் மார்படைப்பு.

குமையவைக்கும் அச்சமே வெலவெலப்பு;
வெலவெலப்புண் டாக்கிவிடும் துடிதுடிப்பு;
—வெற்றிக்கோ அதுதடுப்பு.

417

விரைந்துவிரைந் தோடுவது பரபரப்பு;
வீண்செயல்கள் குறுக்கிட்டால் குலைகுலைப்பு;
—வெற்றிக்கு , விடைகொடுப்பு.

இரைந்திரைந்து பேசுவது வெடிவெடிப்பு;
இஃதுயிரைக் கலைக்கின்ற பொடிபொடிப்பு,
—இறுதியில் உயிர்துடிப்பு.

418

வாய்விட்டுப் பேசாத மொணமொணப்பு,
வாழ்க்கையிலே நோய்க்குறியின் தொணதொணப்பு
—அதுதான் நலத்தடுப்பு.

போய்விட்ட பொருள்எண்ணும் நமநமப்பு,
பொல்லாங்கைச் சேர்த்துவிடும் நறநறப்பு;
—அதனால் வீண் அலுப்பு.

419

பேச்சதனை நீட்டுகின்ற வளவளப்பு,
பெருமைதனை நழுவவிடும் வழுவழுப்பு;
கேட்போர்க்கும் பெரும்அறுப்பு;

பேச்சில்லா நாக்கில்வரும் கொழகொழப்பு,
பேச்சோடு உடற்காகும் தளதளப்பு;
—பிணிக்கும் அடிக்குறிப்பு. 420

உள்ளத்தில் உண்டாகும் மரமரப்பு,
உடலிலே உண்டாக்கும் மொரமொரப்பு;
—வாழ்வின் கீழறுப்பு.

கள்ளத்தால் பேசுகின்ற நொடிநொடிப்பு,
கட்டாயம் ஒருநாளில் தடதடப்பு;
—காண்பீர் கழுத்தறுப்பு. 421

கோள்முட்டி வாழ்வாரின் கொடுகொடுப்பு,
கூட்டிவிடும் பகையென்னும் புடைபுடைப்பு;
கள்ளத்தின் முதற்பதிப்பு.

கால்பிடித்தே ஆள்பிடிக்கும் நெளிநெளிப்பு,
கழுத்தறுப்புக் காரர்இவர் நொளநொளப்பு;
—கலகத்தின் மறுபதிப்பு. 422

பருவத்தில் இளமையொரு மினுமினுப்பு;
பக்குவமாய் வைத்திருந்தால் பளபளப்பு;
— அஃதோர் எழிற்படைப்பு.

உருவத்தில் தாயின்முகம் தகதகப்பு;
உண்மையான தந்தைமுகம் தளுதளுப்பு;
— அவர்தான் பெரும்பொறுப்பு. 423

வளமுள்ள நடைக்குழந்தை துறுதுறுப்பு;
வளர்ந்துவரும் அவரிடையே குறுகுறுப்பு;
— வளமைக்கு முதற்குறிப்பு.

வளமில்லா மனக்குழந்தை மசமசப்பு;
வளர்போக்கில் வளர்த்திடிலோ அதஅதப்பு
— வருந்தோல்வி அறிவிப்பு. 424

குமரிப்பெண் குளிர்காலக் கதகதப்பு;
கிணற்றுநீர் அக்கால வெதுவெதுப்பு;
— அவற்றால் உடல்வனப்பு.

குமரிப்பெண் கோடையிலே குளுகுளுப்பு;
கிணற்றுநீர் அக்கால நயநயப்பு;
— அவற்றால் உளங்குளிர்ப்பு. 425

காதல்வெளிப் படும்பேச்சு கிசுகிசுப்பு;
காதலர்கள் கூடிவிட்டால் கிளுகிளுப்பு;
— காதலுக்கே குதுகலிப்பு.

காதல்மணம் இன்பநலக் குவிகுவிப்பு;
　　காதல்குறுக் கீடானால் தவிதவிப்பு;
　　　　— காதலர்தாம் உயிரிழப்பு. 426

தாய்மொழியை ஒதுக்குவதோர் கிறுகிறுப்பு;
　　தாய்நாட்டைத் தேய்க்கின்ற கரகரப்பு;
　　　　— தாயின் கருவறுப்பு.

தாய்த்தமிழில் பிறமொழியின் நசநசப்பு;
　　தங்கத்தில் இரும்பேற்றும் கசகசப்பு;
　　　　— நாட்டில் களைவளர்ப்பு. 427

'மொழிஇந்தி பொது'என்னும் மொடமொடப்பு,
　　மொத்தம்சில் லரையாக்கும் சடசடப்பு;
　　　　— தமிழ்மீது படையெடுப்பு.

பழிஇதனைப் போக்காத மதமதப்பு,
　　பகைமூட்டம் உண்டாக்கும் கொதிகொதிப்பு;
　　　　— பின்னர் போர்நடப்பு. 428

கார்கால முல்லைமணம் கமகமப்பு;
　　கடுங்கூதிர் மலைத்தேனால் குதுகுதுப்பு;
　　　　— பனிவெய்யில் நல்லழைப்பு;

சீர்தென்றல் இளவேனில் செழிசெழிப்பு;
சிறுசாரல் கோடைமழைப் பொலபொலப்பு;
— இயற்கைதரும் பரிசளிப்பு
429
சாதி,தாழ்வு எண்ணும்மனச் சொரசொரப்பு;
சார்ந்திட்ட புண்ணதனில் சொதசொதப்பு;
— குமுகாயச் சீர்குலைப்பு.
காதில்விழு வதைப்பரப்பும் கிலுகிலுப்பு;
காத்துவரும் அமைதிக்கோர் இடியிடிப்பு;
— கனிவாய்க்கும் வீண்அளப்பு.
430
அகரமுத லியில்உண்டு நொசிநொசிப்பு;
அதன்பொருளோ புறங்கூறும் பிசுபிசுப்பு;
— அறிந்திட்டால் பல்லிளிப்பு.
பகரும்ஒரு சொல்லமைப்பு கொடுகொடுப்பு:
புரியாத பேச்செனும் பொசுபொசுப்பு:
— பொருள்மேல் உடல்நடுக்கு.
431
வழக்கத்தில் அடுக்கும்இந்தச் சொல்லடுக்கு,
வக்கணையாய் உண்டதிலே பொருளடுக்கு;
— வடிக்கின்ற அடுக்கடுக்கு.

இலக்கியத்தில் உண்டிந்தச் சொல்லோட்டம்;
இலங்குமதில் உணர்வார்ந்த பொருளூட்டம்;
— இருக்குமதில் சுவையோட்டம். 432

பரிபாடல்[42] தனில்உண்டு குதுகுதுப்பு;
பெரியபுரா ண[43]த்தும்உண்டு குதுகுதுப்பு;
— ‘பரிவு’ என்றே பொருளதற்கு.

பரிபாடல்[44] காட்டும்ஒரு பதைபதைப்பு;
பற்றும்அதன் பொருளாகும் மெலிமெலிப்பு;
— படிப்போர்க்கும் ஒருசுவைப்பு. 433

திருவாச க[45]த்தில்ஒரு விதுவிதுப்பு;
திகழ்நால டியார்[46]சொல் கலகலப்பு;
— தேர்பொருளோ ஒலிஒலிப்பு.

தரும்நீதி வெண்பா[47]வில் சிலுசிலுப்பு;
தக்கநீதி நெறி[48]யில்ஒரு பரபரப்பு;
— தரும்விரைவுப் பொருளிருப்பு. 434

சீவகசிந் தாமணி[49]யில் வழுவழுப்பு;
சோர்வாக நழுவவிடும் மழுமழுப்பு;
— சேரும்அங்கு பொருளமைப்பு.

தேவாரம்[50] தனில்காணும் வெடுவெடுப்பு
தெளிவில்லா உளம்வெடிக்கும் வெடிவெடிப்பு;
— தேர்பொருளோ சினக்குறிப்பு. 435

கம்பராமா யண[51]த்திலொரு கிளுகிளுப்பு;
கவிக்குற்றா லக்குற[52]த்தில் கிடுகிடுப்பு;
— கடுநடுக்கப் பொருளிதற்கு.

பின்புதனிப் பாட[53]லிலே பளபளப்பு
பெருகும்உரை நூல்களில்இச் சொல்லிருப்பு,
— பெற்றிருக்கும் குடியிருப்பு. 436

பலப்பலவாய்ப் பெருகுமிந்தச் *சொலிசொலிப்பு,
பண்புதரும், துன்புதரும் ஒலிஒலிப்பு;
— பெற்றதிங்கு பாட்டமைப்பு.

புலப்பட்ட அளவில்இங்குப் பொருளடக்கிப்
பொழுதுபோக்காப் பாடியதிப் பாவிருப்பு
— போதுமிந்தப் பெரும்அறுப்பு. 437

[ஒட்டுச் சீர்கள்
பெற்றுவந்த தாழிசைகள்]

---

* சொலி—மென்சொல்

# 56. கவிதைக் குமரி.

செஞ்சொல்லே பஞ்சுடலாய்ச் செழும்யாப்பே
உயிரதுவாய்,
அஞ்சுவையும் அருநயமும் அழகாடை மேகலையாய்ப்
பொன்னன்ன நுண்பொருளே பெண்மைகொள்
கன்னிமையாய்த்
துன்னுஞ்சொல் பொருளணியே துலங்குகின்ற
அணிகலனாய்க்
கொஞ்சுமொழி பண்ணதுவாய்க் கொள்கவிதைப்
பெயர்கொண்டென்
நெஞ்சமெனும் கலையரங்கில் நிலைத்தாடும் குமரீ,கேள்!
- தரவு

சொல்லடுக்கி வரியமைத்துச்
சொல்லிடுவார் நீ, என்றே;
கல்லடுக்கும் கொத்தன்செய்
கலையறிந்தார் இவர்சில்லோர்.

உள்ளுணர்வைப் பிறமொழிகொண்
டுருச்சமைத்தே நீ,என்பார்;
கள்ளுண்போன் நஞ்சுண்ணும்
கழிசெயல்கொள் இவர்சில்லோர்.

பழிவளர்க்கும் பொருளமைத்துப்
பக்குவமாய் நீ,என்பார்;
மொழிவளர்ப்பாய் வயிறுவளர்த்
தொழிகின்ற இவர்சில்லோர்.

- தாழிசைகள்

இவ்வணம்,

- தனிச்சொல்

தேராத் தமிழரின் தீராச் செயலினால்
காராக் கருணைக் கிழங்கெனக் கருத்து,
வெந்த சேப்பங் கிழங்கென வெளுத்து
நொந்திடச் செய்து, நோவுற வைத்தனர்.
உன்முகம் உணக்கும் உமிழ்செயல் உணர்ந்தேன்;
'என்மகன் ஆணை' என்றேன், கவிஞனேன்;
கவிதைக் குமரியே, கண்ணே!
புவிதனில் உன்புகழ் புரிவதென் தொழிலே!

- சுரிதகம்

[நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா]

# 57. சாவில் உயிர்.

## அ. தூய தமிழ்த் துணை

*வாயை நெகிழ்த்தனை; நாவை நெளித்தனை;*
*தாயை நிகர்த்தனை; தூய தமிழ்த்துணையே!*
*வாயை அமிழ்தாக்கு வாய்.*
439

*சொல்லை விரித்தனை; சோர்வை இரித்தனை;*
*எல்லை வகுத்தனை; நல்லை தமிழ்த்துணையே!*
*சொல்லைச் சுவையாக்கு வாய்.*
440

*வாழ்வை விளக்கினை; வாகை துலக்கினை;*
*வீழ்வை விலக்கினை; வீரத் தமிழ்த்துணையே!*
*வாழ்வை வளமாக்கி வாழ்.*
441

[வெள்ளொத் தாழிசை]

ஆ. எண்ணக் குயிலே!

உண்ணப் பழக்கிய வாயை
உரைக்கப் பழக்கிப் பாவைப்
பண்ணப் பழக்கிய தாயே!
பாலில் முப்பால் ஊட்டும்
வண்ணத் தமிழே வாழ்க!
வழங்கும் மொழிப்பூங் காவின்
எண்ணக் குயிலே வாழ்க!
என்னுள் ளத்தே வாழ்க! 442

இ. பாரில் உயிர்வாய்!

நாவின் அசைவிற் பிறந்து,
நாடித் துடிப்பில் நகர்ந்து,
தாவில் உரையில் தவழ்ந்து,
தமிழப் பெயரில் மலர்ந்து,
மேவும் உலகிற் சிறந்து,
மேன்மை மொழியாய்த் திகழ்ந்து
பாவில் அமரும் தாயே!
பாரில் உயர்வாய் நீயே! 443

[அறுசீர்
ஆசிரிய விருத்தங்கள்]

### ஈ. நாடித் துடிப்பில்

நாடித் துடிப்பில் நடக்கும் தலைவீ! அகம்புறமாய்க்
கோடிச் சுவைகள் குவிக்கும் குமரீ! குலவிடுசீர்
நாடிப் புரந்தே நலந்தரும் அன்னாய்; தமிழமுதே!
பாடிக் களிக்கும் பரிவினன் பணிந்து மகிழ்ந்தனனே! 444

[கட்டளைக் கலித்துறை]

### உ. சாவு ஏந்தும் போதும்

பாவேந்தர் நாவில் குடியிருந்தாய்; எங்கள்
நாவேந்தர் அண்ணாவால் நடைபயின்றாய்; என்னைச்
சாவேந்தும் போதும் பாவேந்த மறவேன்;
நீயேந்தின் றென்னை, நிறைதமிழே வாழ்க! 445

### ஊ. சாவில் உயிர்

நாவிற் சுனைநீ! நயக்கும் நெஞ்சக்
காவில் மயில்நீ! கன்னற் சொற்சேர்
பாவில் குயில்நீ! பைந்தமிழ் அன்னாய்!
சாவில் உயிர்நீ! சான்றில் நான்நீ! 446

[கலி விருத்தங்கள்]

## எ. வாழ்த்தாய் நறுநாவே!

'வாழ்த்துதும் வாழ்த்தி வணங்குதும் நந்தமிழ்
வாழ்த்துதும் வாழ்த்தி வளர்க்குதும்' என்றுநீ
வாழ்த்தாய் நறுநாவே! வாழ்ந்தநம் தாய்மொழி
வாழ்வியல் சீர்மொழி 'வான்புகழ்ச் சீரொடு
வாழ்'கென வாழ்த்திடு வாய்! 447

கீழ்கதிர்ப் பேரொளி, ஆழ்கடல் தேர்வளம்,
வீழ்கனித் தேன்சுவை, வாள்தரும் கூர்திறம்,
யாழ்தரும் சீரிசை யாவுமாம் தீந்தமிழ்
'வாழ்வகை ஈ'கென வாழ்த்தாய்! இடர்எலாம்
ஆழ்கென வீழ்த்திட லான். 448

நந்தமிழ், பைந்தமிழ், நற்றமி ழாமென்று
வந்தனை செய்வதற் கந்தநாள் தீந்தமிழ்;
நொந்து பிழைமலிந் திந்தநாள் நைந்திடும்
செந்தமிழ் சீர்பெறச் செந்திரு வாக்கத்தைத்
தந்துநீ வாழ்த்துக தான்' 449

பொருளுக் கிலக்கணம் பெற்ற மொழிச்சொல்
அருளும் பொருளோ அகமாய்ப் புறமாய்த்
தெருளினர் என்னின் தெளிதமிழ்ச் சொல்லில்
அரும்அக வாழ்வோ டணிபுற வாழ்வே
கருதிநீ வாழ்த்திசீர் காண்.

450

தாய்மொழித் தேன்சுவை தான்சொலி வாழ்த்திடத்
தூய்மனம் நேர்பெறும்; தூய்மனம் தேர்சொலில்
வாய்மொழி சார்வுறும்; வாழ்வியல் சீர்பெறும்;
தோய்வினை வான்புகழ் தோய்ந்திடும், ஆதலின்
சேய்,நிறை வாழ்த்தது சேர்.

451

[ஐந்தடிச்
சிஃறொடை வெண்பா]

## ஏ. உவகைதனிற் கிளைக்குந் தூயவள்.

தனதத் தனதனன தனதத் தனதனன
தனதத் தனதனன தானனன் — தன
தனதத் தனதனன தானனன் — தன
தானதானன தானதானன தானதானன தானதானன
தனதத் தனதனன தானனன் — தன
தனதத் தனதனன தானனன்.

- சந்தக் குழிப்பு

உயிரிற் கலந்துநறும் உணர்விற் தெளிந்துலவி
உடலிற் படிந்தமைந்த தாயிவள் — உயர்
உவகை தனிற்கிளைக்குந் தூயவள் — இள
வேனிலோதெளி தேனிதோவெளி வானிலூர்மதி தானிதோவென
உவமை யினிற்கனிந்து மேயவள் — எம
துணர்வும் உளமுந்தவழ் யாயவள்;

வெயிலிற் பிரிந்துநிலம் வினையுற் றியங்குமுனம்
வெளியிட் டியம்புசொலின் தொன்மையள் — நயம்
விளையச் சுவைபுகலும் மென்மையள் — இறைத்
தூயதாமுதல் வாயதாமென மேயதாநயந் தோய்வதாமென
விழையத் தனித்தியங்கு தன்மையள் — பகை
விலகத் தகர்த்தெறியும் வன்மையள்;

பயிலற் கெளியஇயல் பருகற் கினியஇசை
பயனுக் குரியநடிப் பருளினள் — நலம்
படியப் புறம்அகங்கொள் பொருளினள் — நிலம்
வாழவேநெறி சூழவேதுயர் வீழவேவளம் ஆளவேமுறை
பகரக் குறளணிகொள் திருவினள் — சுவை
பழுநப் பலபெருநூற் றிரளினள்;

பயிரிற் பசுமையெனப் பரிவுற் றெமதுகனிப்
பனுவற் பொலிவதனிற் கனிகுவள் — மொழிப்
பணியில் எமக்கொருபொன் வணிகுவள் — புல
வோரையாள்நறும் பாவையீன்றுநல் லோரைமேலுறும்
பாரையாளுகை
பெருகற் குரியவெற்றி துணிகுவள் — அனை
பெருமைத் தமிழ்த்திருவை அணிகுவம். 452

[இடை தனிச்சீர் வீட்டிசைக்கும்
இருபதின்சீர்ச் சந்த விருத்தம்]

# 8. வினை வேறு சொல் வேறு



சொல்லொன்று செயலொன்றால்
நல்லசொல்லி அல்லசெய்தல்
கொல்வதினும் கொடுமையதாம்;
பொல்லர், இவர் தொடர்பதனை

கனவில்காண் பதும்துன்பம்;
நினைவஃதோ பெருந்துன்பம்;
முனையாமல் விடத்தகுந்த
வினையிதனைப் புனைந்தகுறள்:

"கனவினும் இன்னாது மன்னோ, வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு"

[குறள்: 819]

## வேறுபட்டவை:

பொருள்
எண்

பொன்வண்டு - 58.

கதை இனித்தது; செயல் புளித்தது. - 59.

மந்தைக் கரையிலே - 60.

திருவாளர் தெருவாழ்வு - 61.

# 58. பொன் வண்டு.

'பொன்வண்டோ பொன்வண்டு! பிடியரிசிக் கொருவண்டு!
பொன்வண்டோ, பெண்வண்'டென் றொருமுதியோன்
விலைகூறி,
மண்வண்டி இழுத்தோடி மழலைதருஞ் சிறார்குழுவின்
பின்வந்து நின்றபடி 'பிடியரிசி கொடு'என்றான். 453

[தரவுகொச்சகம்]

குடுகுடென ஓடிவந்து,
கொடுங்கைநிறை அரிசிதந்து நின்று,
கொடுகொடென ஒருவண்டைக்
கொண்டிட்ட ஒருதம்பி, வண்டைத்
'தொடுதொடுபோ வானத்தைத்
தொட்டுவிட்டு வா'என்றே நூலை
விடுவிடென விட்டுயர்த்தி
விண்ணைவென்ற சிரிப்பெடுத்து நின்றான். 454

[நெடிலடி
ஆசிரிய விருத்தம்]

அண்ணன் அப்போ தங்கே வந்தோன், தம்பியிடம்
'என்னே, உன்றன் இன்பம் எண்ணி வண்டதனைக்

கொன்னே கொல்வாய்; கூடாதேடா, விடு' என்றான்;
பின்னோன் மீற, முன்னோன் இல்லம் புகுந்தனனே.
455

[கலித்துறை]

வீட்டினுள் தந்தை
விளைத்த சினத்தை வெடிக்கவிட்டுக்
'கேட்டியோ, தங்கை
கெடுநிலை; கேடன் எவனுடனோ
நீட்டினள் கம்பி:
நிறைபழி பெற்றேன்; தமிழ்பயின்றேன்;
ஊட்டின கன்றே
உதைத்தென ஆயினன்' என்றனரே.
456

[கட்டளைக்
கலித்துறை]

.ஒப்பிய காதலர் ஒழுக்கத்தைப் பெற்றோர்
தப்பெனில், மணப்பவர் தழுவியே மறைவதை,
அப்பா! அகப்பொருள் இலக்கண, இலக்கியம்
செப்புமே உடன்போக் கெனப்பேர்; தங்கையும்
அப்படிப் போயினள்; அப்பா,நாம் தேடிப்போய்க்

கைப்பிடியாய்க் கொண்டுவந்து கடிமணம் புணர்ப்பதில்
தப்பிலை; தமிழ்ப்போக்குத் தான்.'

457

[வெண்டுறை]

'ஓட்டுங்கள் அப்பா ஒளிர்சினம்' எனச்சொல்லி
அன்னோன்
கூட்டியே சென்ற குமரன் எவன்'என்றான்; தந்தை:
'கூட்டியே சென்ற குமரன் எவன்என்று
கேட்டியேல் 'மறுப்பாய்; கீழ்வீட்டுக் குமரன்' என்றனரே.

458

[ஆசிரியத் துறை]

'குமரன்அவனா? குறும்பன்,அவனே!
கமழும்எனது கருத்தெதிர்ப்பவன்:
'சமநிலையதே சமுகம்'என்பவன்;
உமிழ்வதன்றியான் உதவஒண்ணுமோ?

[வஞ்சித்துறை]

459

என்றுமேலுமே 'இன்றிரவிலே பொழுதுபோக்கிடும்
மன்றமொன்றிலே கருத்துமாறுளோர் மதித்துவாழ்தல்என்
றொன்றுபற்றிய சொற்பொழிவதற் கொப்பிவந்தனன்:
சென்றுவருவனான்' என்றுபோயினன்; சிறியதம்பியோ,

முன்றில்நின்றுபொன் வண்டுதந்தவெண் முட்டையொன்
றினை
நின்றுவீசினன்: நிவந்துபந்தென நீடுபாய்ந்ததே.
'பொன்றுபாவிநீ, பொழுதுபோக்கவே, பொன்வண்டது
மென்றுதின்னவே மெல்லிலைகொடுத் தேந்திவந்ததன்
துன்றுவாழ்வதைப் பத்தும்ஆடினாய்' என்றதட்டினன்;
அவ்வழி,
அலறியே தம்பி அழுதனன்;
உலறிய வண்டதோ உயர்ந்து பறந்ததே.

460

[சிந்தடி வஞ்சிப்பா]

பறந்தபொன் வண்டது பாடிய பாட்டிது:
'சிறந்தசெந் தமிழதைச் சீரிய கொள்கையைப்
புரந்தரல் போல்குவர்; பொன்றிடும் அவைநிலை
மறந்துதம் மகிழ்ச்சியை மாந்தும் மாந்தரே.

461

[கலி விருத்தம்]

# 59. கதை இனித்தது; செயல் புளித்தது.

வேதமொ டுகுறள் ஓதிய வர்நல்ல
வேங்கடை யர்குறட் பாங்கினையே
ஆதிமு தற்பொருள் சேதியெல் லாமறி
வாற்றலு டன்னுரை சாற்றிவந்தார்;
வீதியி னர்பள்ளுச் சேரியி னர்,அயில்
கண்ணினர், காளையர் நண்ணிவந்தே
காதிடுங் கூட்டத்தில் கண்ணிட்டு நின்றனன்,
'கண்ணன்'எ னும்ஐயர் 'சின்ன'மகன். 462

வெட்டுங் கருவிழி, கொட்டும் அழகுநல்
வள்ளியெ னும்பண்ணைப் பள்ளிதரும்,
மொட்டெனும் பார்வையைச் 'சட்'டெனக் கண்டனன்,
மெல்லக்கு றிகாட்டிக் கொல்லைபுக்கான்;
சிட்டுப்ப றப்பெனக் குட்டிய வள்வள்ளி
சிந்தும் சிரிப்புடன் வந்துநின்றாள்;
தொட்டனன் தீட்டொன்றுஞ் சுட்டதில் லைஅவள்
தொத்தினள் தோளினில்; முத்தமிட்டான். 463

சித்திரைத் திங்களில் நந்திய தாமிந்தச்
சின்ன'வி ளையாடல் வண்ணமுற்றே
முத்தனை யாளிடம் வித்தும்மு ளைக்கநல்
மேனி பசந்தனள் ஆனியிலே.
கொத்திய தென்னடி தொத்துநோய்' என்றப்பன்
கொக்கரித் தான்வள்ளி கக்கிவிட்டாள்;
கத்தியும், கன்னியும் ஒத்தெடுத் தேகுறள்
கற்றவர் தம்மையே பற்றவந்தான். 464

தெள்ளுகு றள்ஐயர் சொல்லிநின் றர்கதை;
'தென்புலைச் சாதியாள் ஆதிஎன்பாள்
வள்ளுவ ரைஉயர் பார்ப்புப் பகவற்கே
வார்த்தனர்' என்றனர்; ஆர்த்துவந்தோன்;
வள்ளிஎன் றன்பறைப் புள்ளிமா னும்உயர்
வண்ணத்துக் கண்ணனுஞ் சொக்கியதால்,
வள்ளுவர் வயிற்றில் பள்ளிகொண் டாரிதை
வாழ்த்துவீர் மன்றுளீர் வாழ்த்தீர்' என்றான். 465

பதைப தைத்துள்ளஞ் சிதைவுற் றேஜயர்
பார்த்தனர் மன்றினை வேர்த்துவிட்டார்;
'விதைத்த வித்தினைப் புதைத்தி டேல்'என்று
வள்ளியுஞ் சொல்லினை அள்ளிவிட்டாள்;
'இதைம னுநீதி ஏற்கா' தென்றார்'கத்தி
ஏற்கவைக் கும்'என்றான்; ஏற்றுவிட்டார்.
கதைஇ னித்ததும் செயல்பு ளித்ததும்
கத்திமு னைமுன்னர் செத்தனவே!

462

[கும்மிச் சந்தம் அமைந்த
எழுசீர் ஆசிரிய விருத்தங்கள்]

# 60. மந்தைக் கரையில்.

சாணியைப் பொறுக்கிவருங் குட்டி - உன்
சாண்முகத்தில் ஏதுதங்கக் கட்டி?
கோணியே குலுங்கும்உன்றன் கன்னம் - எனைக்
கொல்லுதற்குக் கொண்டதுவோ எண்ணம்?
வாணியை வடிக்கும்இதழ் உண்ண — அடி
வாய்பிளந்து நானுனையே நண்ண,
நாணியே குனிவதேனோ கண்ணே? — உனை
நத்துதற் குயிர்பொறுத்தேன் பெண்ணே!
467

மந்தைக் கடுத்தசிறு கொல்லை — அதில்
மாட்டுச்சாணத் திற்கெல்லையே இல்லை;
வந்ததனை நீபொறுக்கிக் கொள்வாய்; — உன்
வண்ணஉடல் நான்பதுக்கிக் கொள்வேன்;
சந்தைக் கடையில்அன்று பார்த்தே — எனைச்
சக்கரத்தின் பல்லிடுக்கிற் சேர்த்தாய்;
சிந்தைக் கதைநிறுத்திக் கண்ணே — மிகச்
சீக்கிரமாய்த் தாண்டிவாடி பெண்ணே!
468

வீட்டினில் அடைந்துகிடந் திட்டால் - உனை
வீண்வம்புக்கு நானிழுக்க மாட்டேன்;
தீட்டிவிட்ட தங்கவுடல் காட்டி - நீ
தெருக்கோடி வந்துவிட்டாய் கூட்டி!
மீட்டிவிட்ட பேரியாழைப் போலே, - உன்
மேனிக்காற்றென் மேற்படிந்த தாலே,
வாட்டிவதைக் கின்றதடி குட்டி - என்
வாட்டங்கெடுப் பாய்கையாற் கட்டி!

469

கட்டவிழா மல்லிகை அரும்பே! - உனைக்
கட்டவிழ்க்கும் வண்டெனை விரும்பாய்!
சொட்டைவிழாப் பொன்சிலையே பேடே; - உனைச்
சொக்கவைக்குந் தீயெனைநீ கூடாய்!
தொட்டுச்சுருங் காததளிர் உன்னை - விரல்
தொட்டுப்பார்க்க ஆசைகொண்ட என்னைத்
தொட்டணைக்க மேலுமினி நாணாய்! - அங்கு
தோட்டக்காற்று போகுதடி வீணாய்.

470

[அடிக்கிடையே கூன் அமைந்த அறுசீர்
ஆசிரியச் சந்த விருத்தங்கள்]

ஏடெடுத்த நற்கவிஞன்
    இப்படியோர் சீர்க்கவிதை
பாடியபின் அக்கவியில்
    பாகதனை - ஓடவிட்ட

தன்கைக்கு முத்தமிட்டான்;
    தன்முகத்தை ஆடிதனில்
புன்னகைக்கே ஆட்படுத்திப்
    பூரித்தான் – 'என்னருமைச்
சொற்பாவாய்; கவிப்பேடே;
    சொக்கவைக்கும் ஏருடையாய்; (5)
நற்காதல் தீம்பொருளே'
    என்றெல்லாஞ் - சொற்பெருக்கி

விம்முகின்ற உள்ளத்தில்
    வெற்றிமகிழ் வேற்றுகையில்
*மம்மரொடு தாழ்குரலில்
    மண்டிநின்றே - 'அம்மம்ம!

* மம்மர்-துயரம்

அண்ணா! நான் என்னென்பேன்
ஆணவத்தை' என்றலறிக்
கண்ணம்மா என்றதங்கை
கண்பிசைய - 'என்னம்மா!

ஏன்தங்காய் ஓலமிட்டாய்?
இன்னலெதும் நேர்ந்ததுவோ:
நான்தீர்ப்பேன் கூ'றென்றே
நாவுதிர்த்தான்; - மான்விழியாள்

நீர்நிறுத்திக் கண்களையும்
நேர்நிறுத்திச் சொல்லுதிர்த்தாள்:
வேர்க்கின்ற நெஞ்சகத்தே
வேற்கண்ணான் - ஏற்கின்றான்;

'மந்தைக் கரைக்கே
மறுதோன்றி கொய்கின்ற
சிந்தையொடு கைவீசிச்
சென்றஎனை, - அந்தவழி

ஆடோட்டுங் கம்போடும்,
 ஆள்விழுங்குங் கண்ணோடும்
மாடெனவே என்னண்டை
 மண்டிவந்து - 'வாடி'என்றும்

'குட்டி'என்றும், 'காதல்'என்றும்
 கும்மாளப் பேச்சிட்டுத்
தொட்டிழுக்க வந்தானே
 அண்ணா,நான் - விட்டகல்லாய்

பாய்ந்திங்கு சேர்ந்துன்னைப்
 பார்த்துயிர்த்தேன்' என்றிட்டாள்.
காய்ந்தவாய் மூடாமல்
 தன்னுணர்வை - மாய்த்துநின்ற

செங்கவிஞன் வேற்கண்ணான்
 செவ்விதழ்கள் தாம்துடிக்கத்
'தீக்களங்கம் சேர்ந்தமைந்த
 தீயோர்கள் - ஊர்க்களத்தே

ஆடுகின்றார்; கன்னியர்கள்
ஆங்குவரின் சொல்லாடல்
நாடுகின்றார்; 'குட்டி'என்றும்
'தொட்டி'டென்றும் - 'கூ'டென்றும்

வாயூறித் தாந்திரியும்
வக்கற்ற ஆண்களிடை
நீஉலவ வேண்டா
நிறுத்'தென்றான் - போய்விட்டாள்.

மங்கையவள் செய்தியினை
மாற்றிவைத்து, வேற்கண்ணான்
துங்கஒளித் தன்கவிதை
துய்க்கலுற்றான்; - அங்கவனோ

துய்க்கின்ற சொல்லெல்லாம்
'தொட்டி'டென்றுஞ் 'சொக்கி'டென்றும்
தைக்கின்ற முள்ளதுவாய்,
தாக்குகின்ற - கைக்குத்தாய்ப்

பேச்சமைந்த சீர்க்கவியே
பாட்டமைத்த அன்னவனை
ஏச்சுக்கே ஆளாக்க
ஏங்கிவிட்டான் - 'சீச்சீ
கவிதை முலாப்பூச்சு
கற்பனையாம் கானல்;
புவிதனில் பொல்லாங்கே
பூக்கக் - குவிப்பதுவாம்'
என்றந்த நற்கவிஞன்
ஏடுகிழித் தோடவிட்டு
வென்றுவிட்ட காளையென
வீறிநின்றான் - 'நன்றறியாக்
கோழையே; செல்'என்று
கொக்கரித்த, தூளான
தாளெல்லாங் காற்றில்
தவழ்ந்து.

471

[பஃறொடை வெண்பா]

# 61. திருவாளர் தெருவாழ்வு.

தெருப்படியில் நின்றபடி பார்த்தே
திருவாளர் புறப்பட்டார் வெளியே;
விருப்பமுடன் திருமதியார் வந்தே
'விரைந்தெங்கே செல்கின்றீர்?' என்றார்;
'புறப்படுங்கால் எங்கென்றாய் நாயே!
புகுந்தனையே பொல்லாங்காய்ப் பேயே!
உருப்படுமா எடுத்தசெயல்' என்றே
உதிர்த்திட்டார் கடுஞ்சொற்கள், ஓய்ந்தார். 472

புறப்படுங்கால் 'எங்'கென்றே வினவின்
பொல்லாங்கே நேருமெனும் பொல்லாச்
சிறைப்படுக்குஞ் சகுனத்தைப் பார்க்கும்
சிறுசெயலால் மனம்வற்றிப் போனார்;
முறைப்படுத்திச் செயலாற்றுந் திறனில்
முழுத்திறனும் பெற்றிருந்தும், இந்தக்
குறைப்படுக்கும் பழக்கத்தால் அன்பைக்
குலைத்தில்லம் குமைந்திடவும் செய்வார். 473

பெருக்கோடும் அன்புடையார்; ஆனால்
பிறக்காடும் புன்பழைமை கொள்வார்;
தருக்காடும் வேங்கைக்கும் அஞ்சார்;
குறுக்கோடும் பூனைக்கோ சோர்வார்;
திருக்காடும் பகைக்கும்பின் வாங்கார்;
தெருக்கோடி மொட்டைவரின் தாங்கார்;
உருக்காடும் தமிழ்மரபில் வந்தார்;
உறும்வாழ்வில் பிறமரபே கொண்டார். 474

'மாலையிட்டு மணந்தக்கால் வாழ்வை
மலர்விரித்து மணந்தந்தாள்' என்றும்
'பாவையிட்ட பனிமொழியாள்' என்றும்
'பண்'என்றும், 'கண்,பொன்னே' என்றும்
'சோலைவிட்ட தென்றல்'என்றும் இன்பாய்க்
சொல்லடுக்கிக் குலவிடுவார் ; இங்கே
ஆலைவிட்ட புகைக்கூடாய் ஆனார்;
ஆரணங்கோ பேய்,நாயாய்ப் போனார். 475

மனைவிட்டுப் புறப்படுங்கால் மக்கள்
மனையாள்பால் மனந்தொட்டுப் பேசி
'எனைவிட்டுப் பிரிந்திருப்பீர்; யானோ
எடுத்துவிட்ட செயல்தொடுத்து முடித்துச்
சுனைவிட்ட நீரெனவே வருவேன்;
சுளைவிட்ட தேன்சுவைகாள்' என்றே
நினைவெடுத்துச் சொல்லிவிட்டுச் சென்றால்
நிகழ்ந்திடுமோ 'எங்'கென்னுஞ் சொல்லே?
476

பணம்விரிக்கப் புறப்படுவேன்; நாளை
பழையனூர் சென்றிடுவேன்; முல்லை
மணம்விரிக்கும் நேரத்தில் வருவேன்;
மனம்விரித்துக் காத்திருப்பீர்' என்றே
குணம்விரித்துச் சென்றிடுதல் நல்ல
குடும்பத்துத் திருவாளர்க் கழகாம்
சினம்விரித்துச் சீறிவிழுள் தேகல்
சிரிக்கின்ற தெருவாழ்வுக் கழகாம்.
477

# 9. நீர் இன்றி அமையாது உலகு



பெயக்கொண்ட மழைநீர் ஓர்
உயிர்க்கொடையாம்; அதன்விளைவாய்
இயற்கையதன் பரிசளிப்போ
வியத்தக்க பலகோடி;

செயற்கையெலாம் இயற்கையதன்
முயக்கமதால் முகிழ்ப்பனவாய்
நயத்தக்க நலமளிக்கும்
இயற்கையிதைக் குறள்கூறும்:

''நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு''

(குறள்: 20)

## நீரோட்டத்தில்:

பொருள்
எண்

இயற்கை ஏடு - 62.

மறைந்தோ போவாய்? – 63.

பாக்களில் பூக்களை வைத்தால்... – 64.

நீரோட்டம் – 65.

# 62. இயற்கை ஏடு.

இரவினிலே விண்மீன்கள் விளக்காய்,
எண்ணிலவாய்ச் சிற்றொளியை வழங்கப்,
பரவொளிகொள் பகலவனே தனியே
பகல்விளக்காய் ஒளிர்வதற்கென் பொருளோ?
கரவுதீது வஞ்சகம்எண் ணிலவாய்க்
கலந்திருக்கும் மன்பதைகொள் குழுவில்,
விரவியநல் லறிவொன்றே சிறந்து
விளங்கும்எனக் காட்டுவதன் குறியாம்! 478

பல்லிதழ்கொள் மலர்களிங்கு மலர்ந்தே
பரந்திருக்க வெண்மையிலே, அலர்ந்த
மல்லிகையாம் மலர்ஒன்றே தனியாய்
மணச்சிறப்பைப் பெற்றதற்கென் பொருளோ?
பல்லுருவில் மக்களிங்கு மிகுவர்;
பயனற்ற வாழ்வதனைப் புரிவர்;
நல்லிசையைப் பெறுவதற்கே அணியாய்
நனிவேண்டும் பண்பெனுமோர் குறியாம்! 479

பல்வகையாய் மரமெல்லாம் இனிமைப்
பயன்தந்து நிற்குங்கால், ஒளிகொள்
பல்லுக்கே வேல்,ஆலம் இரண்டும்
பயன்,உறுதி என்பதற்கென் பொருளோ?
வெல்லுவதே தன்மையெனப் பெரிதாய்
வெறிவாழ்வு கண்டாலும், இனிதாம்
சொல்லுக்குள் உண்மையினை நிறைவாய்ச்
சொரிந்துநிற்க வேண்டுவதன் குறியாம்! 480

ஒப்பில்லா இறையொன்றே அறிவாய்
ஒண்பொலிவில் நின்றிலங்கும் என்பார்,
குப்பைபோல் பலகடவுள் உருவாய்க்
குவலயத்தோர் கொள்வதெதன் குறியோ?
துப்பொன்றாம் மெய்விட்டுக் கொடுமைத்
தீதாம்பல் பொய்கொண்டு சிறுமைத்
தப்பான வழிநடந்து மருளாம்
தற்குறியாய்த் தீர்வததன் பொருளாம்! 481

பொலிவுடைய பலபொருள்கள் சுவையாய்ப்
பொதிந்திருக்க இயற்கையதில் குவையாய்.
மலிவுதரும் முகில்கண்டு மயிலே
மகிழ்தோகை விரிப்பதெதன் குறியோ?
நலிவுகொண்ட மக்கட்கே வளமாம்
நறுவாழ்வை நல்லுரையால் நவின்று
வலிமைதரும் அறிஞர்க்கே விழாவாம்
வகைசெய்ய அறிவிக்கும் பொருளாம்! 482

[அறுசீர்
ஆசிரிய விருத்தங்கள்]

# 63. மறைந்தோ போவாய்?

'முழுநிலவே; விண்ணகத்துத் தங்கத் தட்டே;
முதிர்காதற் குமரியவள் முகத்திற் பூக்கும்
எழில்உருவே' என்றுன்னைக் கவிஞர் பாடும்
ஏற்றங்கேட் டதற்கலர்ந்த முழுநி லாவே!
'எழுதரிய விண்ணகம்ஓர் எண்ணெய்ச் சட்டி;
எழும்முகிலோ நுரையாகும்; அதிலே நீயோ
சுழிகின்ற அப்பளமாய்ச் சுழல்வாய்' என்றால்
'சுடப்பட்ட மலர்'எனவே சுருண்டோ போவாய்' 483

'அன்றொருநாள் அவள்உதட்டில் முத்தம் பாய்ச்ச
அணைத்தவுடன் குனிந்ததலை நிமிர்த்தத் தொட்ட
மென்முகவாய் விளிம்புருவே' என்றே காதல்
மேவியவர் சொற்கலர்ந்த அரைநி லாவே!
'சின்னவொரு பொடியனவன் தின்னக் கொண்ட
சிதல்எடுத்த நாரத்தஞ் சுளைநீ' என்றால்
கன்றிப்போய் உடல்தேயக் கருகித் தீய்ந்து
கருங்காரின் வாய்ப்பட்டுக் கவிழ்ந்தோ போவாய்? 484

'பிறைநிலவே; பிரித்தெடுத்த உதடே போல்வாய்!
பிஞ்சுடல்கொள் அமுதமொழிப் பசுங்கு ழந்தை
நிறைநுதலின் உருவுடையோய்' என்றே பல்லோர்
நிற்புகழ அதற்கலர்ந்த நிலாப் பிறையே!
'குறையுற்றுத் தேய்ந்திட்ட இலாடம் நீயே;
குப்பையிலே கிள்ளியெறி நகமே போல்வாய்;
உறையெடுத்த சிறுவாளே' என்றே உன்னை
உரைத்திட்டால் உடல்அழிந்து மறைந்தோ போவாய்?
485

[எண்சீர்
ஆசிரிய விருத்தங்கள்]

# 64. பாக்களில் பூக்களை வைத்தால்...!

பூக்களைப் பாடிட வேண்டும் - மனப்
பூரிப்பு எல்லையைத் தாண்டும்;
பாக்களில் பூக்களை வைத்தால் - என்றும்
பூக்களும் வாடாத முத்தாம். 486

நீரிலே பூத்ததே உலகம் - அது
நீர்ப்பூவாய் என்றுமே உலவும்;
பாரிது 'பூவுல' கென்றே - நறும்
பூவால் பெயர்பெற்ற தன்றே. 487

பூவால்தான் காய்நெல்லும் விளையும் - அவை
*'பூவா'வாய்ப் பசிநோயும் களையும்,
சாவாமல் காக்கின்ற விருந்து - பூவின்
சாற்றினால் உண்டாகும் மருந்து[54]. 488

அழகிற்குப் பூவன்றோ பரிசு! - பூவின்
அழகின்றேல் உலகமே தரிசு;
'உலகினில் உயர்ந்தது பூவே' - என்றே
உரைப்ப தகராதி நூலே[55]. 489

---

* பூவா - குழந்தை மொழியில் உணவு

மென்மையே மலரதன் பேச்சு - மண
மேன்மையே மலருக்கு மூச்சு;
தென்றலுக் கேதிந்தக் குளுமை? - பூவைத்
தொட்டத னால்வந்த புதுமை! 490

கண்ணுக் கினியது வண்ணம் - அந்தக்
காட்சிக்குப் பூவன்றோ சின்னம்!
பெண்ணுக்குப் 'பூவை'என் றொருபேர் - ஆண்
பெருமைக்கும் 'பூமான்'என் றொருசீர். 491

மூக்கெனும் ஓர்உறுப் பெதற்கோ? - மலர்
மோந்துநல் மூச்சிட அதற்கே;
நாக்கிற் கினிய்து தானே - மலர்
நாட்டிக் கொடுத்தது தேனே. 492

பூத்த செடிகொடி பைம்பொன் - அவை
பூக்கா திருந்திடில் கைம்பெண்;
மூத்த கிழவிக்கும் இளமை - மலர்
மூண்டிடச் செய்திடும் வளமை. 493

தமிழர் திருமலர் முல்லை - அது
தமிழர் வாழ்வியல் எல்லை;
கமழ்ம ணம்காதல் கெல்லும் - அது
கற்பிற் கிலக்கணம்[56] சொல்லும்.

494

தாமரைப் பூவின்றேல் புலவர் - முகந்
தானதன் உவமைக் கலைவர்
* 'ஆம்' எனும் நீர்மலர் ஆம்பல் - ஏழைக்
கணிகலன், நல்லுண[57] வென்பர்

495

காந்தள் இதழ்களைத் தடவி - தன்
காதலி எண்ணாதான் முடவன்;
ஏந்திய பொன்னிறக் கோங்கம் - மார்பில்
ஏந்தாத[58] குமரியோ தீங்காம்.

496

வேழப் பூவிற்று நிற்பாள் - அவள்
விலைமாது தன்னுடல் விற்பாள்[59];
கோலப் பாதிரி விற்பாள் - காதல்
கொண்டாட வாங்குவோள் நிற்பாள்[60].

497

---

* ஆம் - தூயநீர்

குறிஞ்சிப் பாட்டிலக் கியமே - மலர்க்
குவியல் தேக்கிய நயமே,
நெருஞ்சிப் பூவென்ன நெடியோ? - கதிர்
ஞாயிற்றின்[61] காதற் பிடியே!
498

பூவில்லாக் கூந்தல் புல்பூண்டு - சில
பூத்தூவி வாழ்த்தல்பல் லாண்டு;
கோவில்'பூ செய்'[62]பூவால் செய்வார் - தமிழ்க்
கொற்றவர் பூச்சின்னம் கொள்வார்.
499

பூவையர் பருவமே பூப்பு - அவள்
பூப்பதால் திருமணக் கோப்பு;
பூவையால் ஆணுக்கு மணமாம் - அவன்
போய்விட்டால் அவளென்ன பிணமோ?
500

அவன்பிணம் மேலேறும் பூத்தான் - அவள்
அருங்கூந்தல் மறுத்திடு மோதான்?
எவனுன்னை மறுத்துநின் றாலும் - பூவே!
ஏறுநீ கூந்தலில் நாளும்! 501

ஆணவன் மார்பினில் மாலை - அவன்
அணிவதால் அழகெனுஞ் சோலை;
காணவில் லைஇன்று விடுத்தான் - எனக்
காதிலே பூச்சுற்றி[63] விடுத்தார்.
502

மலரிலும் உண்டுதீங் கினமே - அது
மாந்தனிடம் பெற்ற குணமோ?
'சிலரதன் செவ்வியர்'[64] என்றே - குறள்
சீர்தூக் கிற்றுபூக் கொண்டே.
503

மலரின்றி மங்கலம் ஏது? - மாலை
மலரில்லா மணமக்கள் கோது;
மலரேஉன் மெல்லிதழ் மோந்தேன் - மணம்
மதர்த்திட ஊட்டுவாய் தீந்தேன்.
504

[இடையில் தனிச்சீர் விட்டிசைக்கும்
ஈரடித் தாழிசைகள்]

# 65. நீரோட்டம்.

‘குடைநிழல் இருந்து குஞ்சரம் ஊர்ந்தோர்
நடைமெலிந் தூர்தொறும் நண்ணுவர்’’[65] எனப்பெரும்
படையுடைப் பாண்டியன் பகர்ந்த நிலையினை
அடைந்தேன், யானுமோர் அவலப் பெண்ணே. 505

சிறந்தபல் பொருள்களுஞ் சீர்த்தியுங் கொண்டதே
பிறந்தகம் எனக்கு,நான் புக்கக மோவெனில்
மறந்திடா துள்ளளவும் மதிக்க இடுவதைக்
கரந்திடும், முத்தையுங் கனிந்திடும் இடமதே. 506

எவ்விடம் பிறந்தென்; எவ்விதஞ் சிறந்தென்?
செவ்வி ஒழியவே ‘சிக்’கெனத் துன்பம்
கவ்வி உடலெலாங் கருகிட, வாழ்வினைக்
கவ்விட ஆயினேன், கனலின் மெழுகதே. 507

இன்னுமென் துயரினை இயம்பிட முற்படின்
மின்னும்உம் கண்களோ அருவியை ஈன்றிடும்;
குன்றும்என் நிலையால் குன்றொடு கொடுமையும்
கன்றும்; கேளும்,என் கதைக்குடங் கவிழ்ப்பனே: 508

நீந்தவுந் திரியவும் நிகழ்த்தாது குஞ்சினை
ஏந்தலும் இலாமல் இறக்கிடும் மீன்போல்,
நேர்ந்தஎன் அன்னையும் நேயமாய் என்னையே
ஈந்தனள் உலகினுக் கியற்றிடப் பணியதே.
509

